# இறை தரும் கொடையே மீட்பு

இறை தரும் கொடையே மீட்பு - நம்
கறையெல்லாம் களைந்திடுமே
மறை வாழ்வில் இணைத்திடுமே
நிறை வாழ்வை அளித்திடுமே

தெய்வம் மண்ணில் வந்தது
நாம் மீட்படைய மாந்தர் மீட்படைய
தன்னுயிர் அன்பில் தந்தது
நாம் மீட்படைய மாந்தர் மீட்படைய
ஆவியின் வரங்கள் பெற்றது
நாம் மீட்படைய மாந்தர் மீட்படைய
அன்னையாம் திருச்சபை வாழ்வது
நாம் மீட்படைய மாந்தர் மீட்படைய

**1**
இறையன்பை உணர்ந்து வாழ்ந்திட விளைதல் - மீட்பு
செப தப வாழ்வை சீருடன் செய்தல் - மீட்பு
ஆலயம் சென்று அருளினைப் பெறுதல் - மீட்பு
இறை அருளினால் எம்மைச் சான்றோர் ஆக்குதல் - மீட்பு

**2**
ஏழையின் வாழ்வில் ஒளியினை ஏற்றுதல் - மீட்பு
அடுத்தவன் துன்பம் தடுத்திட நினைத்தல் - மீட்பு
பிறரன்பில் வாழ்ந்து உறவினை வளர்த்தல் - மீட்பு
பொறுமையின் சின்னமாய்ப் போற்றிட வாழ்தல் - மீட்பு

**3**
ஏற்றத் தாழ்வினை மாற்றிட முனைதல் - மீட்பு
ஆற்றும் பணியில் அமைதியைக் காணுதல் -மீட்பு
மனிதனின் உரிமை மதித்தே பேணுதல் - மீட்பு
சமத்துவம் கண்டு நீதியில் வாழ்தல் - மீட்பு